## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை - 2014

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

(i) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக அரச மானியங்கள் முறையே ரூபா 8,779,054 தொகையும் ரூபா 1,756,112 தொகையும் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அது நிதி நிலைமைக் கூற்றில் மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்படும் அனைத்து பெறுமதிகளுக்காக முன்னைய காலப்பகுதிக்குரிய ஒப்பீட்டுத் தகவல்கள் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

(i) நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாடு, முதலீடு மற்றும் நிதி செயற்பாடுகள் என்பவற்றை தெளிவாக இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படாதிருந்ததுடன், கையிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி என்பன சரியாக பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) இணைந்த கம்பனியின் ரூபா 83,131,040 தொகையான இலாபப் பங்கு சீராக்கம் காசுப்பாய்ச்சல் கூற்றில், காசுப்பாய்ச்சலாக முதலீடு மற்றும் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

(i) 2011 திசெம்பர் 31 வரை நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கணக்கீட்டுக் கொள்கையாக காணப்பட்ட குறைந்து செல்லும் மீதி முறைமை 2012 ஆம் ஆண்டிலிருந்து எளிய முறைமைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டுக்

கொள்கைகள் மாற்றப்படும் போது பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் பிரகாரம் ரூபா 418,476,859 தொகையான முன்னைய ஆண்டுகளின் சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் பின்னோக்கிய சீராக்கங்களை விரிவாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முன்னைய ஆண்டின் போது மீள்மதிப்பீட்டு இலாபம் ரூபா 100,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டதை நியமத்தின் பிரகாரம் சீராக்கம் செய்யாமல், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் விரிவானதல்லாத வருமானத்தின் கீழ் சீராக்கம் செய்தமை குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் ரூபா 48,902,871 கிரயத்திலான தேறிய பெறுமதி பூச்சியமான நடைமுறையல்லாத சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சொத்துக்களின் பெறுமானத்தேய்வு வீதத்தினை தீர்மானிக்கும் போது அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் மோட்டார் வாகனங்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யும் போது பயன்படுத்தப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு 10 ஆண்டுகளுக்கு குறைவான மோட்டார் வாகனங்களிற்காக 10 சதவீதமும், 10 ஆண்டுகளுக்குக் மேற்பட்ட மோட்டார் வாகனங்களிற்காக 20 சதவீதமுமாக கணக்கிடப்பட்டிருந்தன.

(iii) நியமத்தின் பிரகாரம் மீள்மதிப்பீட்டு இலாபத்தின் உரித்தை காட்டுதல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டியதுடன், பின்னர் ஏற்படும் மீள்மதிப்பீட்டு நட்டம் அம் மீள்மதிப்பீட்டு இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களில் மீள்மதிப்பீட்டு இலாபத்தினை வேறாக காண்பிக்கப்படாமல் இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது மீள்மதிப்பீட்டு நட்டமாக ரூபா 100,000 தொகை விரிவானதல்லாத வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஏனைய உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு விகிதம் கணக்கு கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் பிரகாரம் ஊழியர் பணிக்கொடை கடப்பாடுகள் கணிப்பீடு செய்யும் போது அலகு கடன் முறைமை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20

சபைக்கு அவ்வப்போது அரசிடமிருந்தும் வெளித்தரப்பினரிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற ரூபா 15,325,675 தொகையான மானியங்கள் மற்றும் அவற்றின் காலக்கழிவு பெறுமதியான ரூபா 3,866,736 தொகை மூலதன மற்றும் ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24

நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

(i) 2012 ஆம் ஆண்டில் ரூபா 122,822,417 தொகையான இழப்பு ஏற்பாடு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான பங்கு முலதன முதலீடு மீளாய்வு செய்யப்படாமல் மீளாய்வாண்டிற்காகவும் அம்மீதி முன்கொண்டு வரப்பட்டிருந்தது. கடந்த 07 ஆண்டு காலப்பகுதியில் பங்கிலாபம் கிடைக்காத கம்பனிகளில் முதலீட்டுப் பெறுமதி ரூபா 25,750,000 ஆக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக நட்ட ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலுவையாக இருந்த ஏற்றுமதிக் கடன்மீதி ரூபா 46,391,543 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 45,477,591 தொகைக்காக இழப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏற்றுமதி கடன் அறவிடுவதின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொள்ளாமல் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது இழப்பு ஏற்பாட்டிற்காக சமமான அளவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நட்டமடைந்த கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 107,500 தொகையான அகற்றுதல்கள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதனத் தன்மையிலான ரூபா 218,559 தொகையான செலவினம், வருமான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது அட்டுறு செலவினத்தின் கீழ் ஏற்பாடு மேற்கொள்ளப்படாத ரூபா 7,357,040 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் போது அட்டுறு செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், ஏற்பாடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 3,988,213 தொகை அட்டுறு செலவினக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படவுள்ள வியாபாரக் கண்காட்சிக்காக வெளியிடப்பட்ட விளம்பரக் கட்டணங்களுக்காக ரூபா 1,071,131 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன், அது மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரண்டு தேயிலை உற்பத்தி கம்பனிகளுக்கு ரூபா 02 மில்லியன் கொடுப்பனவு செய்வதற்கு சபையினால் மீளாய்வாண்டின் போது ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அதற்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் சரியாக கணக்கிடப்படாத காரணத்தினால் பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா 231,561 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் கணக்கில் அசாதாரண செலவு ரூபா 92,995 தொகையும், கடன்கொடுத்தோர் கணக்கில் அசாதாரண வரவு ரூபா

10,528,683 தொகையுமாக காணப்பட்டதுடன் அம்மீதிகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கோ அல்லது அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ரூபா 1,072,659 தொகையான முற்பணக் கொடுப்பனவுகள் குறித்த ஆண்டுகளின் போது செலவினங்களுக்கு வரவு வைக்காமல் பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 80,984 கூட்டுத்தொகையான முற்பணங்களுக்குரிய சேவைகள் மற்றும் வழங்கல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் அம்முற்பணங்கள் தீர்க்கப்பட்டு குறித்த செலவினங்களுக்கு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாத முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) ஏற்றுமதி உற்பத்தி கிராம கம்பனிகளிலிருந்து பெறவேண்டிய கடன் மீதிகளில் ரூபா 53,581 தொகையும் கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 2,823,088 தொகையுமாக ரூபா 2,876,669 கூட்டுத்தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.

(ஒ) ஏற்றுமதி நிலைமையில் மரக்கறிகள் தொடர்ச்சியாக உற்பத்தி செய்யும் நோக்கில் ஊவா பரணகம கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்திற்காக கிராமிய பொருளாதார புனரமைப்பு நிதியத்திலிருந்து ரூபா 30 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. கட்டளையிடப்பட்டதன் பிரகாரம் பாதுகாப்பு வலைகள் கிடைக்காததன் காரணமாக ரூபா 25 மில்லியன் அந் நிதியத்திற்கு மீளச் செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலும் செலுத்த வேண்டிய ரூபா 5 மில்லியனிற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இச்செயற்திட்டத்தின் கீழ் ஒரு விவசாயிக்காக ரூபா 50,000 வீதம் வழங்கப்பட்ட ரூபா 5 மில்லியன் கடன் தொகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வயைிலும் ரூபா 2,108,252 தொகை அறவிடப்பட்டிருந்தது. அது கிராமிய பொருளாதார புனரமைப்பு நிதியத்திற்கு செலுத்தப்படாதிருந்ததுடன், திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய தொகையொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2012 மார்ச் 28 முதல் 31 வரை நடைபெற்ற இலங்கை எக்ஸ்போ வியாபாரக் கண்காட்சிக்கு அனுசரணை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்த 5 வெவ்வேறு கம்பனிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2.5 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு அல்லது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய அலுவலக வாடகை ரூபா 516,495 அட்டுறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் முதலீட்டு பெறுமதி ரூபா 40,548,150 ஆக இருந்த போதிலும், பட்டோலைகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 31,698,150 ஆக இருந்தமையால் ரூபா 8,850,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) சபையின் சட்டப் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுமதி கடன் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களிலுள்ள அம்மீதிகளுக்கிடையே ரூபா 812,724 ஆன வேறுபாடொன்று இருந்ததுடன், அதற்காக காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 217,378,519 தொகையான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் ரூபா 44,094,883 தொகையான நடைமுறைப் பொறுப்புக்களுக்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள், பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு என்பனவும் ரூபா 88,410,118 தொகையான முதலீட்டிற்காக பங்குச் சான்றிதழும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து 2006 ஆம் ஆண்டிலிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 65,254 தொகையும் இனங்காணப்படாத கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 51,235 தொகையுமாக ரூபா 116,489 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,463,068 தொகையான முற்பணம் அந்நிகழ்ச்சித்திட்டம் செயற்பாடற்று இருக்கையிலும் பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) 2014 சனவரி 09 ஆந் திகதி சோனி டிஜிடல் வொய்ஸ் ரெகோடரொன்று கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு உடன்படிக்கையொன்று இல்லாமல் வழங்கப்பட்ட ரூபா 16,000 முற்பணத் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அலுவலகத்தின் உப வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வாடகையான ரூபா 735,875 தொகையை சபை அறவிடப்பட்டிருக்க வில்லை.

### 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாடகை உரிமையாளருடன் உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாமல் 2014 மார்ச் 15 ஆந் திகதி முதல் 2014 ஒக்தோபர் 25 வரை சபையின் தலைமை அலுவலகத்திற்காக மாதமொன்றுக்கு ரூபா 4,500,000 வீதம் ரூபா 31,500,000 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2014 யூலை 21 ஆந் திகதிய சீஎம்/சீஎம்சீ/ஆர்பி/102 ஆம் இலக்க பாரிய கொழும்பு விலைமதிப்புத் திணைக்களத்தின் மாகாண விலை மதிப்பீட்டாளரின் அறிக்கையின் பிரகாரம் அதிகரிக்கப்பட்ட புதிய குத்தகை வாடகை ரூபா 500,000 தொகையை 2014 யூலை 21 ஆந் திகதி முதல் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2014 ஏப்ரல் மாதத்திலிருந்து செலுத்தியமையால் கூடுதலாகச் செலுத்திய ரூபா 2,000,000 ஐ சபை மீள அறவிட்டிருக்கவில்லை.

(ஆ) தெஹிவள கல்கிஸ்ஸ மாநகர சபைக்குரிய கட்டிடமொன்றில் சபையின் ஒரு களஞ்சியம் நடாத்திச் செல்லப்பட்டு வருவதுடன், அந்நிறுவகத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டிற்காக குத்தகை வாடகை ரூபா 99,960 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் கட்டிடத்தின் பகுதியொன்று தனியார் கம்பனியொன்றுக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அக்கம்பனியுடனும் உப வாடகை உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(இ) 1996 பெப்ரவரி 20 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் 1996 ஆம் ஆண்டினுள் 5 ஏற்றுமதி உற்பத்தி கிராமங்களை ஸ்தாபிப்பதற்காக ஒரு ஏற்றுமதி உற்பத்திக் கிராமத்திற்கு ஆகக்கூடியது ரூபா 1,000,000 தொகை 7 சதவீத வருடாந்த வட்டியின் கீழ் கடன்தொகையொன்றை வழங்குவதற்கு சபை இணங்கியிருந்த போதிலும், உடன்படிக்கையொன்று இல்லாமல் ஒரு ஏற்றுமதி உற்பத்தி கிராம கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,493,310 ஆன கடன்தொகையில் எதுவித பணத்தையும் இதுவரையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உதவிகள் அங்கீகரிக்கப்படாதிருந்த போதிலும், இரண்டு கம்பனிகளுக்கு மீள அறவிடப்படாத உதவிகளாக பா 13,495,029 தொகை வழங்கப்பட்டிருந்தது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1979 இன் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச் சட்டம் | |
| (i) 2(ட) ஆம் பிரிவு | ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கொள்கை அமுலாக்கலுக்கான தேசிய அபிவிருத்தி மன்றம் 1992 ஆம் ஆண்டிலிருந்து முதல் 2014 ஆம் ஆண்டு வரையான 22 ஆண்டுகளில் கூடியிருக்கவில்லை. |
| (i) 12(1) ஆம் பிரிவு | சபையினால் 1988 ஆம் ஆண்டிலிருந்து தனியார் கம்பனிகளில் ரூபா 929,548,150 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மிகை நிதியை முதலீடு செய்வது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அவ்வப்போது விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் தொடர்பில் சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| XV ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு மற்றும் 2007 செப்தம்பர் 11 ஆந் திகதிய 21/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு பிரதமரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 8 உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றிருந்தனர். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 71 | பொது நலவாய அமைச்சின் அரச தலைவர்களின் மாநாட்டிற்கு இணையாக |

| | | |
|---|---|---|
| | | நடாத்தப்பட்ட வியாபாரக் கண்காட்சியின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக வர்த்தகத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவர் 2013 செப்தம்பர் 24 ஆந் திகதி முதல் 2013 நவம்பர் 23 ஆந் திகதி வரை ரூபா 80,000 சம்பளம் மற்றும் ஏனைய நலன்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 104(1), 104(3), 104(4) மற்றும் 110 | 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விபத்து நேர்ந்த நாள் முதல் 03 மாதங்களுக்குள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு உத்தேசிக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை உட்பட பூரணமான அறிக்கை ஒன்று பரிசோதனைக் குழுவால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் விபத்துத் தொடர்பான விபரங்களடங்கிய இழப்புப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 177 | சேகரிக்கப்பட்ட அரசின் பணத்தை நாள்தோறும் வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும், சபைக்கு கிடைத்த ரூபா 74,972 தொகை 02 மாத காலம் தாமதத்தின் பின்னர் வங்கியிலிடப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 322(2) | கொடுப்பனவு செய்யப்படாத சம்பளம் ரூபா 24.390 தொகை மற்றும் சிறாப்பரிடமிருந்த ரூபா 7,839 தொகை என்பவற்றை அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 371(2) (ஆ),(இ) | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் செயல் நிமித்த உபகட்டுநிதி ரூபா 20,000 இற்கு மேற்படக் கூடாத போதிலும், சபையினால் 37 சந்தர்ப்பங்களில் ரூபா 1,563,500 கூட்டுத்தொகையான முற்பணங்கள் நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தன. முற்பணமாக பெற்றுக் கொண்ட முழுத்தொகை மற்றும் முற்பணமாக வழங்கிய தொகையில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு மீள தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன், குறித்த உத்தியோகத்தர்களால் ரூபா 88,490 தொகையை 06 முதல் 27 நாட்கள் வரையான காலப்பகுதியில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (vi) | நிதிப் பிரமாணம் 396 | வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 317,234 தொகையான 18 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப் பிரமாணம் 1645 | வாகனத்தின் பாதுகாப்பு தொடர்பாக செய்யப்படும் மாற்றங்கள் தொடர்பான சகல தகவல்களையும் |

---

உள்ளடக்கிய சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்கள் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் 31 வாகனங்களுக்கு உரித்தான வாகன சம்பவக் குறிப்பேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(viii) நிதிப் பிரமாணம் 1646 — ஒதுக்கப்பட்ட வாகனங்களின் மாதாந்த பொழிப்புக்கள் மற்றும் ஏனைய வாகனங்களின் நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் என்பவற்றின் மூலப் பிரதிகளை உரிய மாதம் முடிவடைந்து அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) நிதிப் பிரமாணம் 1647 (உ) — வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை.

(ஈ) திரைசேரி சுற்றறிக்கைகள்

---

(i) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை — நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய எம்ஓஎவ்பீ/01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கை

- 5 (i)ஆம் பிரிவு — அமையப் படிகள் வெளிநாட்டு அரசு அல்லது நிறுவனத்தினால் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தின் போது செலவிடப்படும் பிரயாணச் செலவினம், விமான நிலையக் கட்டணம், விசாக் கட்டணம் என்பவற்றை தீர்த்துக் கொள்வதற்கே செலுத்த முடியுமான போதிலும், வெளிநாட்டுப் பயணத்திற்காக குறித்த வெளிநாட்டு அனுசரணை நிறுவனத்தினால் அச்செலவினங்களுக்காக அனுசரணை வழங்கியிருக்கையில் சபையினாலும் 5 உத்தியோகத்தர்களுக்கு அமையப் படிகளாக ரூபா 286,597 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- 06(i) ஆம் பிரிவு — வெளிநாட்டுப் பயணங்களுக்காக இணைந்த படிகள் கொடுப்பனவின் போது சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டாவது தொகுதியின் கீழ் செலுத்த வேண்டிய 6 உத்தியோகத்தர்களுக்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முதலாவது தொகுதியின் கீழ் இணைந்த படிகள் கொடுப்பனவு செய்தமையால் முறையே ரூபா 448,622 தொகை மற்றும் ரூபா 250,728 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) அரச நிதிச் சுற்றறிக்கை

---

(i) 2001 பெப்ரவரி 28 ஆந் திகதிய பீஎவ்/பீஈ 14 ஆம் இலக்க — கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றை நடாத்துவதற்கு அரச நிறுவனங்களில் வசதிகள் காணப்படுகையில் அவ்வாறான

| | | |
|---|---|---|
| | சுற்றறிக்கையின் vii ஆம் பிரிவு | நிகழ்ச்சித்திட்டங்களை ஹொட்டேல்களில் நடாத்தி ரூபா 83,600 தொகை ஹொட்டெல் கட்டணங்களாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களுக்காக வேறான ஓர் சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் ரூபா 37,066,961 பெறுமதியான கணனி மற்றும் உதிரிப்பாகங்களுக்காக அத்தகைய பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க சுற்றறிக்கை | |
| | • 02 மற்றும் 03 ஆம் பிரிவுகள் | குறித்த காலப்பகுதியில் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | • 3.5 ஆம் பிரிவு | 2013 பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரைகள் இல்லாமல் 258 பொருள் உருப்படிகள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2010 செப்தெம்பர் 06 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3.1(ஆ) ஆம் பந்தி | சபையின் வாகனமொன்றைப் பழுதுபார்ப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 274,902 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 ஆம் பந்தி | பாதீட்டைச் சமர்ப்பிக்கையில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அத் திகதியில் பாதிடப்பட்ட ஐந்தொகை என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2003 ஒக்தோபர் 06 ஆந் திகதிய என்பீ/3 ஆம் இலக்க தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சுற்றறிக்கை | புதிய செயற்திட்டமொன்று செயற்படுத்து வதற்கு முன்னர் செயற்திட்டத்திற்குரிய முன்மொழிவு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபையினால் மீளாய்வாண்டில் செயற்படுத்தப் பட்ட ரூபா 21.3 மில்லியன் தொகையான 2 செயற்திட்டங்களுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | பொது முயற்சிகளினால் மேற் கொள்ளப்படுகின்ற விளம்பர நிகழ்ச்சித் திட்டங்கள், முறையாக தயாரித்து கிரய நலன்கள் பகுப்பாய்வுடன் அதன் நோக்கம், கிரயம், பெறுபேறுகள் என்பவற்றின் அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படுத்தி பொது முயற்சிகள் திணைக்களத்தின் |

அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், விளம்பரங்கள் மற்றும் அனுசரணைகள் விளம்பர அறிவித்தல்களுக்காக ரூபா 6,776,430 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2014 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவற்றை தெளிவாக இணங்காணக்கூடிய வகையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 105,651,865 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 100,514,844 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,137,021 தொகையான சாதகமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வியாபாரக் கண்காட்சிகளின் தெரிவுப் பரிசோதனையின் போது 5 கண்காட்சிகளுக்காக 143 ஏற்றுமதியாளர்கள் பங்குபெறச் செய்யப்பட்டு ரூபா 9,702,584 தொகை செலவிப்பட்டிருந்த போதிலும், அவர்களில் ஏற்றுமதி மேம்பாட்டிற்கு 17 ஏற்றுமதியாளர்கள் மாத்திரம் பங்களிப்புச் செய்திருந்தனர். இதன் பிரகாரம் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு தொடர்பிலும், வெளிநாட்டு சந்தைகளில் கண்காட்சிக்காக ஏற்றுமதியாளர்களை பங்குபெறச் செய்தலும் ஆக்கபூர்வமான முறையில் இடம்பெற்றிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டிற்கு இணையாக நடாத்தப்பட்ட வியாபாரக் கண்காட்சிக்காக தொலைத்தொடர்பு நிறுவனமொன்று ரூபா 5 மில்லியன் பங்களிப்பினை வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும், எழுத்துமூல உடன்படிக்கையொன்றோ அல்லது அனுசரணை வழங்குவதாக உறுதியொன்றோ பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆதலால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 2.5 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. மேலும் இவ்வியாபாரக் கண்காட்சிக்கு அனுசரணை வழங்கிய நிறுவனத்திற்காக விற்பனைக் கூடங்கள் மற்றும் விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இடவசதிகள் இலவசமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அனுசரணைக்கு வழங்க வேண்டிய வசதிகள் அல்லது நிபந்தனைகள் என்னவென்பது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முதலீடு

(i) மீளாய்வாண்டில் கலைக்கப்பட்ட 3 கம்பனிகளின் சாதாரண பங்குகளில் முதலீட்டுப் பெறுமதியான ரூபா 17,315,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் மீள பதிவுசெய்யப்படாததன் பேரில் கம்பனி பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கப்பட்டிருந்த 16 கம்பனிகளின் முன்னுரிமைப் பங்குகளின் பெறுமதி ரூபா 34,591,428 தொகையினதும் 17 கம்பனிகளின் சாதாரண பங்குகளின் பெறுமதி ரூபா 5,132,890 தொகையினதும் முதலீடுகளை தீர்வு செய்வதற்காக சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏற்றுமதி கம்பனிகளில் நிதிப்பலத்தை மேம்படுத்தும் நோக்கில் 1983 – 1999 வரையான காலப்பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்ட கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 166 ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 59,659,978 தொகையான கடன் தொகையில் ரூபா 13,268,435 தொகை 2006 முதல் 2014 வரையான காலத்தில் அறவிடப்பட்டிருந்ததுடன், 2005 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 139 ஏற்றுமதிக் கம்பனிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 33,116,208 கூட்டுத்தொகையான நிலுவை கடன்தொகையை அறவிடுவதற்காக இதுவரை சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. சபையினால் சட்ட நடவடிக்கைகளை குறித்த தினங்களில் எடுக்காமை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த கம்பனிகளிடமிருந்து கடனை அறவிட்டுக்கொள்வதிலுள்ள முன்னேற்றம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்காமையால் அறவிடப்படாமல் காணப்படும் கடன் மீதிகளின் காலப்பகுப்பாய்வு 15 வருடங்கள் முதல் 20 வருடங்களுக்கு இடையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் பாதீட்டிலும் அங்கீகரிக்கப்படாத திறமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்பட வேண்டிய முயற்சியாளர்களின் எண்ணிக்கை, முயற்சியாளர்களை தெரிவுசெய்த அடிப்படை, பயிற்சித் துறை மற்றும் காலம் தொடர்பான முன்னர் இனங்காணப்படாமலும் உடன்படிக்கையொன்றில்லாமலும் 2011 ஒக்தோபர் 25 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் முயற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்காக தேசிய இளைஞர் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மன்னார் மாவட்ட செயலாளருக்கு 2014 ஏப்ரல் 22 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 845,000 தொகையான முற்பணத்தொகை மாவட்ட செயலாளரால் தனியார் சாரதிப் பாடசாலையொன்றுக்கு நேரடியாக வழங்கப்பட்டிருந்தமையால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தொடர்புபடுத்தப்பட்டு பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்த பயிற்சிகள் என்னவென்பதும் தனியார் சாரதி பயிற்சி நிறுவனமொன்று ஊடாக ஏற்றுமதி துறையுடன் தொடர்பான பயிற்சிகள் என்னவென்பது கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் செயற்படுத்த வேண்டிய செயற்திட்டங்கள் என்னவென்பது மாவட்ட செயலாளர் அறிவூட்டப்படாமையால் ரூபா 3,575,000 தொகையான முற்பணத் தொகை செலவிடப்படாது குறித்த மாவட்ட செயலாளரின் பொது வைப்புக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 மார்ச் 28 மற்றும் 31 ஆந் திகதிகளில் நடைபெற்ற எக்ஸ்போ 2012 வியாபாரக் கண்காட்சி தொடர்பாக பண்டாரநாயக்க விமான நிலையத்தில் பராமரிக்கப்படுகின்ற எல்ஈடீ கண்காட்சி பதாதை அக்கண்காட்சி முடிவடைந்ததன் பின்னரும் உடன்படிக்கைக் காலம் நீடிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பராமரிக்கப்பட்டிருந்தது. இப்பதாதைக்காக 2013 சனவரி – செப்தெம்பர் காலப்பகுதிக்காக உடன்படிக்கைத் தொகையை விட ரூபா 73,049 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2011 – 2014 காலப்பகுதியில் 15 மாதங்களில் அப்பதாதையில் எந்தவொரு விளம்பரமும்

மேற்கொள்ளப்படாதிருந்தமையால் இவ்விளம்பரத்தால் சபை எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமை அல்லது விளம்பர தேவைப்பாடொன்று இல்லையென மேலும் அவதானிக்கப்பட்டது.

**4.4 வெளிப்படையான மோசடிகள்**

சபை பெற்றுக்கொண்டிருந்த பாதுகாப்பு சேவையின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர், சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் வேறு இரண்டு பாதுகாப்பு பதவிகளில் கடமை புரிந்ததாக போலியான கையொப்பமிட்டு 2014 சனவரி 01 முதல் ஒக்தோபர் 31 வரை ரூபா 226,530 தொகை சம்பளமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அச்சம்பளத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.5 நோக்கத்திற்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹிந்த சிந்தனை தொலைநோக்கில் உள்ளதாக குறிப்பிட்டு ஏற்றுமதிச் சந்தைக்கு மிளகாய் வழங்குவதை நோக்காகக் கொண்டு வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மிளகாய் பயிரச் செய்கை செயற்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு ரூபா 15 மில்லியன் தொகை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அத்தொகையை மிகைத்து ரூபா 22.7 மில்லியன் செலவு செய்து 50 ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்ட மிளகாய்ப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்திலிருந்து இதுவரை ஏற்றுமதி சந்தைக்கு எதுவித ஏற்றுமதியொன்றும் இடம்பெற்றிருக்கவில்லை. சபை ஏற்றுமதி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக சபையின் நோக்கங்களுக்கு முரணாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொது நலவாய விளையாட்டு விழா – 2018 இல் அம்பாந்தோட்டைக்காக கேள்வி முன்வைத்தல், இலங்கையினுள் விளையாட்டு அபிவிருத்தி, தேசிய மற்றும் அகில இலங்கை மட்டத்தில் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் விளையாட்டு பயிற்சி வசதிகளில் முதலீடு போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிறுவப்பட்ட தனியார் கம்பனியின் பங்கு மூலதனத்தில், சபையினால் அமைச்சரின் அங்கீகாரமின்றி ரூபா 8 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிந்த போதிலும், அதற்கான நலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 4,020,848 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.6 பயனற்ற செலவினம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத அலுவலக உபகரணங்கள் மற்றும் 8 கணனி உதிரிப்பாக உருப்படிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்தும் 27 வாகன உதிரிப்பாகங்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நடாத்தப்படுகின்ற கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக உரிய முகாமைதத்துவமொன்றில்லாமல் எழுதுகருவிகள் கொள்வனவு செய்தமை மற்றும் அச்சிடப்பட்டதால் ரூபா 1,301,922 ஆன இருப்புக்கள் மற்றும் சபையின் பாவனைக்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து

கொள்வனவு செய்யப்பட்ட 54 எழுதுகருவி உருப்படிகள் எதுவித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

30 கம்பனிகளின் முன்னுரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 105,058,084 தொகையான முதலீட்டிற்காக 1997 – 2014 காலப்பகுதிக்கும் 31 கம்பனிகளில் சாதாரண பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 43,494,334 தொகையான முதலீட்டிற்காக 2001 – 2014 காலப்பகுதிக்கும் பங்கிலாபம் பெறப்பட்டிருக்கவில்லை.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 282 மற்றும் 223 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 59 ஆக இருந்தது. அவ்வாறே ஒப்பந்த அடிப்படையில் 4 பேர் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.9 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்**

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக சபைக்குரிய 5 வாகனங்கள் மற்றும் 4 உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சின் சேவைக்கு ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது வாகனப் பராமரிப்பு செலவினமாகவும் பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகளாக முறையே ரூபா 1,593,229 தொகை மற்றும் ரூபா 1,231,027 தொகையுமாக மொத்தம் ரூபா 2,824,256 சபையினால் செலுத்தப்பட்டிருந்தன.

**4.10 வாகனப் பயன்பாடு**

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5(அ) ஆம் பிரிவின் பிரகாரம் அரச கூட்டுத்தாபனமொன்றில் ஒதுக்கப்பட்ட அடிப்படையில் வாகனங்களை பயன்படுத்தல் தலைவருக்கும், பணிப்பாளர் நாயகத்திற்கும், நிறைவேற்றுப் பணிப்பாளருக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக சபையின் பணிப்பாளர் பதவிகள் வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு வீட்டிற்கும் கடமை நிலையத்திற்கும் செல்வதற்கும் மற்றும் தனிப்பட்ட பிரயாணங்களுக்காகவும் உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் எரிபொருளுக்காக ரூபா 3,192,029 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009/(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 7 மற்றும் 9 ஆம் பிரிவின் படி, உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களும் கணக்காய்வுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிராததுடன் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது நலிவுற்ற நிலையில் இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 6 கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஐயவினாக்களில் குறிப்பிடப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பாகவும் சபையின் கவனத்தைச் செலுத்தி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வுப் பந்திகள்**

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட எனினும், போதிய கவனத்தைச் செலுத்தியிராத கணக்காய்வுப் பந்திகள் பின்வருமாறாகும்.

| 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வுப் பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வுப் பந்தியின் சுருக்கம் |
| --- | --- |
| (அ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | (i) வாடகைக் காலம் நீடிக்கப்படவோ அல்லது புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2013 திசெம்பர் 31 வரை வாடகையாக ரூபா 841,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ii) ஜாதிக சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,009,740 தொகை அந்த அலுவலகத்திலிருந்து உறுதிப்படுத்தலொன்று இல்லாமலும் முறையான அங்கீகாரம் இன்றியும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவு | மோட்டார் சைக்கிள் கடன் மற்றும் இடர் கடன் வழங்கப்படுகையில் மாதாந்தக் கழிப்பனவுகளின் கூட்டுத்தொகையின் எல்லை மாதாந்தச் சம்பளத்தின் 50 சதவீதமாகக் கருதப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | நிதிக் குத்தகைக் கொள்வனவு முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளாமல் 05 ஆண்டுகளுக்காக வாடகை அடிப்படையில் 04 வாகனங்களுக்காக 2013 திசெம்பர் 31 வரை ரூபா 10,051,179 தொகை வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | சபையின் பிரதிப் பணிப்பாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 5,500 தொகையும் ஏனைய ஊழியர்களுக்கு நாளாந்தம் ரூபா 164 தொகையான எல்லைக்கு உட்பட்டு 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த மொத்த போக்குவரத்துப் படிகள் ரூபா 5,004,963 ஆக இருந்தது. |
| **(இ) முகாமைத்துவ செயற்திறனின்மை** | இந்தியாவின் சென்னை நகரில் 2004 – 2009 ஆம் காலப்பகுதியின் போது சபையால் நடாத்தப்பட்டு வந்த இலங்கை வர்த்தக நிலையத்தின் 5 விற்பனை நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை மற்றும் மின்சாரக் கட்டணமான ரூபா 7,049,858 தொகை 2014 யூன் 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| **2012 ஆம் ஆண்டின் கணக்காய்வுப் பந்தியுடனான தொடர்பு** | |
|---|---|
| (ஈ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்திற்கு முரணாக நியமிக்கப்பட்டிருந்த நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மாதாந்தப் படிப்பணம், எரிபொருள் படிப்பணம் மற்றும் தொலைபேசி கட்டணமாக ரூபா 1,557,337 கூட்டுத்தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) இனங்காணப்பட்ட நட்டங்கள் | “அம்பாந்தோட்டை படஅத” கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தோற்பொருள் கைத்தொழில் செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 முதலீடு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட தனியார் கம்பனியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது கைவிடப்பட்டிருந்தமையால் முதலீடு செய்யப்பட்ட தொகையை சபைக்கு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமான குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முதலீடு
(இ) கடனை மீள அறவிடுதல்
(ஈ) நிலுவை வருமானம்
(உ) சொத்துக் கட்டுப்பாடு
(ஊ) வர்த்தகக் கண்காட்சி
(எ) பாதீடு